Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 63

சனிக்கிழமை 28 ஜனவரி 2023

தை 14 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

இலங்கையில் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க

## உலக சுகாதார ஸ்தாபனம் அழுத்தம் கொடுக்கவேண்டும்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள்

விரிவு:- பக். 03

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்

# தமிழர்கள் என்பதற்காக தடுத்துவைக்கமுடியாது

## கொழும்பு மேல்நீதிமன்றம் அதிரடி

கொழும்பு, ஜன. 28
தமிழர் என்பதற்காக ஒருவரைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்க முடியாது எனத் தெரிவித்ததோடு அவ்வாறு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட இளைஞரை விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற »11

## நாடாளுமன்று ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜன. 28
ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் நேற்று நள்ளிரவுடன் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய ஜனாதிபதியின் செய »11

## இளவாலையில் மோதல் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28
இளைஞர்களிடையே நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த ஒருவர், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். புஸ்பராசா நிஷாந்தன் (வயது - 29) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் இளவாலையில் இடம்பெற்றுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது: »11

# ‘13’ நடைமுறையானால் தமிழீழம் மலர்ந்துவிடுமாம்!

## பழைய பல்லவி பாடுகிறார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, ஜனவரி 28

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும். தமிழீழம் மலர வழிவகுக்கும். நாடெங்கும் மீண்டும் இரத்த ஆறு ஓடும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ எச்சரிக்கை விடுத்தார். »11

## ரணிலுக்கு எதிராகப் போராடிய இருவருக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம், ஜன. 28
தேசிய பொங்கல் விழாவில் ஜனாதிபதி கலந்துகொண்ட நிலையில், அவரின் வருகைக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட மேலும் இருவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குறித்த போராட்டம் தொடர்பாக கடந்த 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்து விசாரணை »11

அத்துமீறிய மீன்பிடி

## படகுகளை மீட்டுச்செல்ல உரிமையாளர்கள் வருகை

யாழ்ப்பாணம், ஜன. 28
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்தியப் படகுகளை மீட்பதற்கு இந்தியாவில் இருந்து படகுகளின் உரிமையாளர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளனர். கடந்த 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வந்த இவர்கள் ஊர்காவற்துறை நீதிமன்றில் வழக்கு விசாரணைக்காக நேற்றுச் சென்றுள்ளனர்.
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாகக் கைதுசெய்யப்பட்டதுடன், அவர்கள் மீன்பிடிக்காகப் பயன்படுத்திய படகுகளும் »11

## நாயைக் காப்பாற்ற முயன்ற இளைஞன் நீரில் மூழ்கிப் பலி



கிளிநொச்சி, ஜன. 28
கிணற்றில் வீழ்ந்த நாயைக் காப்பாற்ற முயன்ற நபரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கிளிநொச்சி உதயநகர் மேற்குப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.
நாயொன்று கிணற்றுக்குள் வீழ்ந்த நிலையில், அதைக் காப்பாற்றுவதற்காக விவேக் வேனிலன் (வயது - 24) என்ற இளைஞன் »11

## ஹெரோய்னுடன் பெண் கைது

யாழ்., ஜன. 28
உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் 3 கிராம் ஹெரோய்னுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய ஹெரோய்ன்போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குறித்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
மேலதிக விசாரணைகளின் பின்னர் »11

## மூன்று இந்தியப் படகுகள் நீதிமன்றத்தால் அரசுடமை

யாழ்ப்பாணம், ஜன. 28
இந்திய மீனவர்களின் மூன்று படகுகள் அரசுடமையாக்கப்படுவதாக ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. மேலும் நான்கு படகுகளுக்கான கட்டளை மார்ச் மாதம் முதலாம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது.
ஏழு படகுகள் தொடர்பான வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. வழக்குத் தவணைகளுக்குப் பல »11

## பால் புரையேறி சிசு உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28
யாழ்ப்பாணம் ,புத்தூர் - நவக்கிரிப் பகுதியில் தாய்ப்பால் புரையேறி ஆண் சிசுவொன்று உயிரிழந்துள்ளது. பிறந்து 30 நாள்களேயான சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.
தாய்ப்பால் புரையேறியதையடுத்து »11

# 8000 பக்தர்கள் பங்கேற்புடன் இம்முறை கச்சதீவுப் பெருவிழா

## முன்னாயத்தக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன. 28

இம்முறை கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தை 8 ஆயிரம் பக்தர்கள் பங்கேற்புடன் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் 3,4ஆம் திகதிகளில் கச்சதீவுப் புனித அந்தோனியார் ஆலய திருவிழா நடைபெறவுள்ளது.

திருவிழாவுக்கான முன்னாயத்த நடைமுறைகளை செயற்படுத்துவது குறித்த கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாதசுந்தரன் தலைமையில் இடம்பெற்றது.

இலங்கை மற்றும் இந்திய இரு தரப்புகளின் இணக்கத்துடன் கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தில் 8ஆயிரம் பேர் பங்கேற்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் 4ஆயிரத்து 500 இலங்கைப் பக்தர்களும் 3 ஆயிரத்து 500 இந்தியப் பக்தர்களும் ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் விருந்தினர்கள் பங்கேற்கவுள்ளனர்.

கூட்டத்தின்போது இந்தியத் தூதரக அதிகாரிகள், குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், கடற்படைத் தளபதி, பொலிஸார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதேவேளை கடந்த இரு ஆண்டுகளாக கொரோனா காரணமாக உற்சவத்தில் பங்கேற்கும் பக்தர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. (ச-26)

## கேதீஸ்வரத்தில்
# சிவராத்திரிக்கு 5 லட்சம் பக்தர்கள்

மன்னார், ஜன. 28



பிரசித்தி பெற்ற தலங்களுள் ஒன்றான மன்னாரில் காணப்படும் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம்பெறவுள்ள சிவராத்திரி வழிபாட்டுக்கு இந்த முறை 5 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் ஒவ்வொரு வருடமும் சிவராத்திரி வழிபாடு சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

இந்த ஆண்டு சிவராத்திரி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

வழமைபோன்று சிவராத்திரி வழிபாட்டுக்குரிய ஆயத்தங்களை மேற்கொள்வது தொடர்பான கூட்டம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச்செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

2015 ஆம் ஆண்டிலிருந்து ஏழு வருடங்களாக ஆலயத்தில் திருத்தப் பணிகள் இடம்பெற்றமையால் பாலாலயம் அமைத்து சுவாமிகள் வழிபட்டு வந்தனர். ஆனால் தற்போது ஆலயத்தில் கும்பாபிஷேகம் இடம்பெற்றுள்ளமையால் ஆலயத்துக்குள் பக்தர்கள் சென்று வழிபட்டு வருகின்றனர்.

இதனால் இந்த வருடம் வடக்குப் பகுதியில் மட்டுமல்ல நாட்டின் நான்கு பக்கங்களிலிருந்தும் சுமார் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் போக்குவரத்து, சுகாதாரம், அன்னதானம், தாகசாந்தி நிலையம், குடிதண்ணீர் போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டு அதற்கான சகல நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் கவனஞ்செலுத்த வேண்டும் என்று மாவட்டச்செயலர் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன் 17,18 ,19 ஆகிய தினங்களில் ஆலயச் சூழலில் உள்ள நான்கு மடங்களிலும் அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் ஏழு இடங்களில் தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும் அந்தந்தப் பிரிவால் தெரிவிக்கப்பட்டது.

மன்னாரில் தற்போது கொரோனா அபாயம் இல்லாததால் பக்தர்கள் சுதந்திரமாக ஆலயத்துக்கு வந்து செல்ல முடியும் என்று சுகாதாரப் பிரிவால் தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர் மற்றும் திருக்கேதீஸ்வர ஆலய செயலாளர் எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-14,60)

# காட்டு யானைகளால் மிரளும் முல்லைத்தீவு

முல்லைத்தீவு, ஜன. 28

முல்லைத்தீவு தென்னியங்குளம், துணுக்காய், அமதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், உயிலங்குளம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், தேராங்கண்டல் உள்ளிட்ட கிராமங்களில் யானைகளின் தாக்குதல் அதிகரித்துள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக தென்னியங்குளம் கிராமத்திலுள்ள மக்கள் விவசாயத்தை முழுமையாக நம்பியுள்ளனர். எனினும் கிராமத்துக்குள் நுழையும் யானைகள் அங்குள்ள வாழ்வாதாரப் பயிர்களை அழிக்கின்றன. வனஜீவராசிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட யானை வெடிகளுக்குக் கூட அஞ்சாமல் பயிர்களை அழிக்கின்றன.

அத்துடன் தென்னியங்குளம் அணைக்கட்டு வழியாக வரும் யானைகள் குளத்தின் அணைக்கட்டையும் சேதப்படுத்தி உள் நுழைகின்றது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த நிலையிலே அனைத்துக் கிராம மக்களும் யானைகளைக் கட்டுப்படுத்துமாறு துணுக்காய் பிரதேசசெயலகத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். (எ-14,13)

# சிறுமி மீது துஷ்பிரயோகம் சந்தேகநபருக்கு மறியல்!

முல்லைத்தீவு, ஜன. 28

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போதைக்கு அடிமையான சகோதரனின் நண்பர்களால் சிறுமி துஷ்பிரயோகத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 17 வயதான பிரதான சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மூங்கிலாற்றுப் பகுதியில் சிறுமி ஒருவர் போதைப்பொருளுக்கு அடிமையான சகோதரனின் அனுமதியுடன் நண்பர்களால் 3 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சகோதரனின் நண்பர்கள் நால்வரில் பிரதான சந்தேகநபர் ஒருவரை நேற்று கைதுசெய்து முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர்.

எதிர்வரும் 14 நாள்களுக்கு சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. அத்துடன் மேலும் தொடர்புடைய மூன்று சந்தேநபர்களையும் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் நீதிமன்று உத்தரவிட்டது. (ச-125)

# கிளிநொச்சி - பூநகரி வழித்தடத்தில் பஸ் சேவைகளை நடத்தப் பணிப்பு

## *கிளி.சாலை முகாமையாளருக்கு மாவட்டச் செயலர் அறிவிப்பு*

கிளிநொச்சி, ஜன. 28

இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றை கிளிநொச்சி பூநகரி வழித்தடத்திலிருந்து மாலை வேளையில் உரிய நேரத்தில் சேவையில் ஈடுபடுத்தவேண்டும் என்று கிளிநொச்சி சாலை முகாமையாளருக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார்.

பூநகரி வழித்தடத்தில் பயணிக்கும் பஸ்ஸை உரிய நேரத்தில் சேவையில் ஈடுபடுத்தவேண்டும் என்று பூநகரி பிரதேசசபைத் தவிசாளர், கிளிநொச்சி மாவட்டச் செயலருக்கு விடுத்த கோரிக்கைக்கமைய மாவட்டச் செயலர் கிளிநொச்சி சாலை முகாமையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இந்த அறிவித்தலை விடுத்தார்.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:

கிளிநொச்சி - பூநகரி போக்குவரத்து வழித்தடத்தில் நேர அட்டவணையின் அடிப்படையில் மாலை வாடியடி பஸ் தரிப்பிடத்தில் இருந்து மாலை 5 மணிக்குப் புறப்படும் பஸ், முக்கொம்பன் கிராமத்துக்குச் சென்று மாலை 6.20 மணியளவில் கிளிநொச்சியை சென்றடைகின்றது. இந்த சேவையின் ஊடாகப் பயணிப்போர் அதிகளவானோர் அரச அலுவலர்களாவர். அவர்கள் வீடு திரும்பிச் செல்வதற்கு மாலை 7 மணிக்கு மேல் செல்கின்றது.

இவ்வாறான நேர அட்டவணையால் அரச அலுவலர்கள் அண்ணளவாக 2.30 மணித்தியாலங்கள் காலதாமதமாகவே வீட்டுக்குச் செல்கின்றனர். காலதாமதத்தால் முக்கொம்பன் சந்தியில் தரித்து நிற்கும் பெண் அலுவலர்களுக்கு பாதுகாப்பற்ற நிலைமை காணப்படுகின்றது. இதன் காரணமாக பூநகரி பிரதேசத்துக்கு இடமாற்றலாகி வரும் அலுவலர்கள் மேன்முறையீடு செய்து தமது இடமாற்றலை பூநகரி பிரதேசத்தில் இருந்து தவிர்த்து வருகின்றனர்.

பூநகரி பிரதேசசபை, பூநகரி பிரதேச செயலகம், பூநகரி பிரதேச மருத்துவமனை, பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நில அளவைத் திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம், கிளிநொச்சி பொது மருத்துவமனை போன்றவற்றில் கடமையாற்றும் தலா 30 க்கும் மேற்பட்ட அரச அலுவலர்கள் இந்த பஸ் சேவையைப் பயன்படுத்துகின்றனர்.

அத்துடன் முழங்காவிலில் கிளிநொச்சி வழித்தடப் பஸ் சேவை முற்பகல் 11.45 மணிக்குப் பின்னர் சேவையில் ஈடுபடுவதில்லை. இதனால் முழங்காவில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

எனவே மேற்கூறப்பட்ட பிரச்சினைகள் ஆராயப்பட்டு இவ்வாறான நேர விரயத்தைத் தவிர்த்து உரிய நேரத்தில் சேவையை மேற்கொள்ள மேலதிக போக்குவரத்துச் சேவையை வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்தச் சேவையை முழங்காவிலில் இருந்து பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பித்து வாடியடியை 4.30 மணிக்குள் வந்தடைந்து நேராக கிளிநொச்சி சென்றடைவதற்கு உரிய நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (எ-14,13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க

# உலக சுகாதார ஸ்தாபனம் அழுத்தம் கொடுக்க வேண்டும்

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள்*

**கொழும்பு, ஜன. 28**
**நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் உதவவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே இதுதொடர்பில் தெரிவித்துள்ளதாவது:

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடுகள் காரணமாக மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி தொடர்பாக ஜனாதிபதிக்கும் சுகாதார அமைச்சருக்கும் தெரிவித்து வந்துள்ளோம்.

மருந்துப் பொருள்களின் விலைகள் சொல்ல முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளன. மருந்துகளைக் கொள்வனவு செய்வதில் பல முறைகேடுகள் ஊழல்கள் இடம்பெறுகின்றன. மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடுகள் காரணமாக மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி தொடர்பாகவும் ஜனாதிபதிக்கும் சுகாதார அமைச்சருக்கும் தெரிவித்து வந்துள்ளோம்.

நோயாளிகள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதன் மூலம் தீர்வைக் காண முடியாது என்பதை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உணர்ந்துள்ளது. இதன் காரணமாகவே உலக சுகாதார ஸ்தாபனத்தை நாட தீர்மானித்துள்ளோம்.

இலங்கைக்கு பொருள்கள் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் மருந்துப்பொருள்கள், உபகரணங்கள் தட்டுப்பாடு காரணமாக இலங்கை மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தீர்வை வழங்கவேண்டும் என அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் சுகாதார அமைச்சு உட்பட அதிகாரிகளுக்கு அவசியமான அழுத்தங்களை உலக சுகாதார ஸ்தாபனம் கொடுக்கவேண்டும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது- என்றார். (எ-14,இ)

## மின் தடை தொடர்ந்தால் சட்ட நடவடிக்கை உறுதி!

*பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எச்சரிக்கை*

கொழும்பு, ஜன. 28
மின்சாரத்தை தடையின்றி வழங்குமாறு இலங்கை மின்சாரசபைக்கு விடுத்த உத்தரவை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று முன்தினம் வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறும் நிலையில், எந்தவித தடையுமின்றி தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு உத்தரவு விடுத்துள்ளது.

அதனை நிறைவேற்றத் தவறும் பட்சத்திலே சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார். (எ-14,இ)

## லலித் மற்றும் கப்ராலுக்கு நீதிமன்று அழைப்பாணை

கொழும்பு, ஜன. 28
முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரை எதிர்வரும் 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கோட்டை நீதிவான் திலின கமகே நேற்று முன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளராக லலித் வீரதுங்க கடமையாற்றியபோது, 2014 ஆம் ஆண்டு எந்தவித அனுமதியும் இன்றி இலங்கையின் நற்பெயரை அதிகரிக்கவென கூறி டபிள்யூ.ஆர்.குறுப் என அழைக்கப்படும் தரப்புடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்டு அதை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பினார் என்றும், அமெரிக்கப் பிரஜையான இஷாட் ஷா சுபேரி என்பவருக்கு 6.5 மில்லியன் லட்சம் டொலரை மத்திய வங்கி வழங்கியது என்றும் தெரிவித்து தினியாவல பாலித தேரர் குறித்த இருவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்த நிலையில் வழக்கை ஆராய்ந்த கோட்டை நீதிவான், லலித் வீரதுங்க மற்றும் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரை எதிர்வரும் 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார். (எ-14,இ)


## கல்லுண்டாயில் வாள்வெட்டு; சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 28
கல்லுண்டாயில் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்ட பிரதான சந்தேகநபர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லுண்டாய்ப் பகுதியில் வீடொன்றுக்குள் நுழைந்த கும்பல், வீட்டில் இருந்தவர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியது.

அது தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர், யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயற்படும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அதனையடுத்து சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-14,26)



## ஒரு மாத நிலுவையெனில் வரும் வாரம் மின்துண்டிப்பு

*யாழ். பாவனையாளருக்கு அறிவுறுத்து*


யாழ்ப்பாணம், ஜன. 28
யாழ்.மாவட்ட மின்சார பாவனையாளர்களில் ஒரு மாதத்துக்கு மேல் மின்சாரக் கட்டணம் நிலுவையில் உள்ளவர்களின் மின் இணைப்பு எதிர்வரும் வாரங்களில் துண்டிக்கப்படவுள்ளது என இலங்கை மின்சார சபையின் யாழ். தலைமை பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

துண்டிக்கப்படும் சந்தர்ப்பத்தில் 3 ஆயிரத்து 250 ரூபாய் மீளிணைப்புக் கட்டணம் அறவிடப்படும். அத்துடன் 6 மாத காலத்துக்கு மேலாக மின்துண்டிப்பு செய்யப்பட்டு நிலுவை செலுத்தாத பாவனையாளர் மீது சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது.

எனவே மின்சாரக் கட்டணம் செலுத்தாது நிலுவையிலுள்ள பாவனையாளர்கள் உடனடியாக மின்சாரக் கட்டண நிலுவையை செலுத்தி மின்சாரத் துண்டிப்பை தவிர்க்குமாறு பொறியியலாளரால் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-27)

# வரிக் கொள்கைக்கு எதிராக கையெழுத்துக்கள் சேகரிப்பு

*வடக்கு மாகாணத்தில் முன்னெடுப்பு*



முல்லைத்தீவு, ஜன. 28
மருத்துவமனைகளில் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யவேண்டும் என்றும், முறையற்ற வரிக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்றும் அரசாங்கத்துக்கு எதிராக மருத்துவர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் கறுப்புவார போராட்டத்தின் ஒருபகுதியாக கையெழுத்து சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று வெள்ளிக்கிழமையும், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மல்லாவி உள்ளிட்ட மருத்துவமனைகளில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையும் கையெழுத்து சேகரிப்பு இடம்பெற்றது.

அநீதியான- அரசின் தன்னிச்சையான- மக்களுக்கு பாதகமான வரிக்கொள்கையை கண்டிப்போம் என்ற தொனிப்பொருளில் கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை கறுப்பு வாரமாக அறிவிக்கப்பட்டு மருத்துவர்கள் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.

அதில் ஒருபகுதியாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக மக்களிடமிருந்து கையெழுத்து பெறும் நடவடிக்கையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

ஒழுங்கற்ற மற்றும் தவறான பொறிமுறைகளை உடன் நீக்கி மருந்துத் தட்டுப்பாடு இல்லாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற இந்த மனு மக்களிடம் சேகரிக்கப்படும் கையெழுத்துகளுடன் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. (ச-113,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய வங்கிகளின் சேவைகள் மக்களைச் சென்றடையவேண்டும்

## யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

கிராமிய வங்கிகளின் செயற்பாடுகள் யாவும் மக்களைச் சென்றடையக் கூடியவாறு கூட்டுறவுச் சங்கங்கள் சேவையாற்றவேண்டும் என யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் மற்றும் பொதுமுகாமையாளர்களுக்கான மாதாந்த கூட்டம் கடந்த புதன்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

கூட்டத்தில் கருத்துரைக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டுறவுக் கிராமிய வங்கியில் அங்கத்துவ கடன்களைப் பெறறவர்களிடமிருந்து சங்கங்கள் துரிதமாக அறவிடவேண்டும். ஒவ்வொரு கிராமிய வங்கிகளினதும் செயற்பாடுகள் யாவும் மக்களைச் சென்றடைய வேண்டும். மக்கள் நடமாடும் இடங்களில் கிராமிய வங்கிகள் அமைக்கப்படவேண்டும்.

இந்த ஆண்டில் அவற்றின் செயற்பாடுகளை அதிகரிக்கும் முகமாக கூடுதலாக அங்கத்தவர்களை இணைத்து சிறந்த சேவையை மக்களுக்கு ஆற்ற வேண்டும்.

இதற்கென ஒவ்வொரு கூட்டுறவு அமைப்புகளும் தத்தம் பிரதேசத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (ச-17)

# தங்கூசி வலைகள் யாழில் விற்பனை

## உரிமையாளருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஜன 27

அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட பொருளான தங்கூசி வலைகளை விற்பனை செய்த உரிமையாளருக்கு யாழ்.நீதிமன்று நேற்றுமுன்தினம் தண்டம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தினர் யாழ்.நகரில் மேற்கொண்டசோதனையின்போது கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையத்தில் தங்கூசி வலைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டன. அதனையடுத்து உரிமையாளருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபரான உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் தங்கூசி வலைகளையும் உடன் அழிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ச-17)

# கடன் மறுசீரமைப்பு பேச்சு ஜூனுக்குள் முடிவடையும்!

## மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை

கொழும்பு, ஜன. 28

இலங்கை தனது கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்த பேச்சுக்களை 6 மாதத்துக்குள் பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

'எக்கனமிக் அவுட்லுக் 2023' என்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மாதம் சிறந்த முன்னேற்ற சமிக்ஞைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்தியா நிதி உத்தரவாதத்தை வழங்கியுள்ளது. சீனா ஜப்பான் ஆகிய நாடுகளிடமிருந்து விரைவில் உத்தரவாதமும் விரைவில் கிடைக்கும்.

பரிஸ் கழக நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளுடனான பேச்சுக்களில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்தால் பின்னர் வர்த்தக மற்றும் இரு தரப்பு கடன்வழங்குநர்களுடன் நாங்கள் பேச்சை ஆரம்பிப்போம். இந்த நடவடிக்கையை ஆறு மாதங்களுக்குள் பூர்த்தி செய்ய திட்டமிட்டுள்ளோம். கடன் பேண்தகுதன்மை உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இலங்கை பேண்தகு வளர்ச்சியை நோக்கி பயணிக்க முடியும் - என்றார். (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். மனக் கசப்புகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள். ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம்.

**மீனம்:** புதிய முயற்சிகளை பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செய்யவும். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. சிலருக்கு எதிர்பாராத பணவரவு உண்டு.

# கறுப்பு வாரத்துக்கு ஆதரவாக கோட்டையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 28

அரசாங்கத்தின் புதிய வரி அறவீட்டு முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச மற்றும் தனியார் துறை தொழிற்சங்கங்களால் "கறுப்பு வாரம்" முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக கொழும்பு கோட்டையில் ஆர்ப்பாட்டமொன்று நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மத்திய வங்கி, அரச மற்றும் தனியார் வங்கிகள், துறைமுகம் ஆகிய பிரிவுகளின் ஊழியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எனப் பலரும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை அநுராதபுரம், புத்தளம், நுவரெலியா உள்ளிட்ட பல பகுதிகளிலும் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-14,இ)

# வடமாகாண விவசாய உற்பத்திகளை சிங்கப்பூரில் சந்தைப்படுத்தத் திட்டம்

## ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

வடக்கு மாகாண விவசாய உற்பத்திப் பொருள்களை சிங்கப்பூரில் சந்தைப்படுத்துவது தொடர்பில் சிங்கப்பூர் உயர்மட்ட பிரதிநிதிகளுடன் விரைவில் ஆலோசனை நடத்தப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி நாட்டின் உற்பத்தித் துறையை மேம்படுத்துவதற்கான முதலீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறார். ஜனாதிபதியின் பரிந்துரைக்கமைய முதலீடுகள் தொடர்பில் இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் உயர்மட்டக் குழுவினருடன் ஏற்கனவே சந்திப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. அதன் தொடர்ச்சியாக வடக்கில் சுகாதாரம், விவசாயம் ஆகிய துறைகளை ஊக்குவிப்பதற்கு சிங்கப்பூர் அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கின் விவசாய உற்பத்திகளை சிங்கப்பூர் நாட்டில் சந்தைப்படுத்துவதற்கு சிங்கப்பூர் சிரேஷ்ட அமைச்சர் தர்மன் சண்முகரத்தினத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதற்கமைய சிங்கப்பூரிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரின் உதவியைப் பெற்றுக் கொண்டு குறித்த திட்டங்களை முன்னோக்கி நகர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (ஒ-14-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

"உனக்காக வாழ்கிறேன் என்று பிறர் சொல்வதைவிட உன்னால் வாழ்கிறேன் என்று ஒருவரைச் சொல்ல வை!" – அன்னை தெரேசா


# பந்தாடப்படும் '13'

'13 ஆவது திருத்தத்தின் மூலம் இலங்கையில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மிகக்குறைந்தவை. லண்டன் நகர சபைக்குள்ள அதிகாரங்கள் கூட இலங்கையில் மாகாண சபைகளுக்கு இல்லை' இவ்வாறு நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் தெளிவுபடுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. மிகக்குறைந்த அதிகாரங்களை மாகாண சபைகளுக்குப் பகிரும் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்தவேண்டும். அவ்வாறு நடைமுறைப்படுத்தினால் அதனால் நாடு பிளவடையும் என்று கூறுவதையோ, இலங்கை பெடரல் அரசாக மாறும் என்பதையோ ஏற்கமுடியாது என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி.

நாட்டின் பொருளாதாரச்சிதில நிலைக்குள்ளும் பொருண்மியப் பேரழிவுக்குள்ளும் ஜனாதிபதியாக ரணில் பொறுப்பேற்றபோது, இவற்றிலிருந்தெல்லாம் மீள்வதற்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படவேண்டும் என்பதே சர்வதேசம் அவருக்கு முன்வைத்த ஒற்றைத் தெரிவாக – ஒருவழிப் பாதையாக – நிரந்தர மீட்சிக்கான பொறிமுறையாக இருந்தது. இதற்கேற்ற துலங்கல்களை ரணில் வெளிப்படுத்தவும் செய்தார். எதிர்வரும் சுதந்திரதினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படும். அந்தத் தீர்வு 'அனைவரும் ஏற்கும்படியான' தீர்வாக அமையும் என்றும் அவர் பட்டவர்த்தனம் காட்டினார். சர்வகட்சிப் பேச்சுக்களையும் தமிழ்த் தேசியக் கட்சிகளுடனான சந்திப்புக்களையும் நடத்தினார். இந்த நடவடிக்கைகள் மற்றும் நகர்வுகளின் தொடர்ச்சியான அறிவிப்பாகவே ரணிலின் இந்தக் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

'13' தொடர்பான கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுவது இதுவொன்றும் முதல்முறையல்ல. கடந்த மூன்று தசாப்தத்துக்கும் மேற்பட்ட காலத்தில் எண்ணிமுடித்துவிட முடியாத அளவுக்கு இந்தத் திருத்தம் தொடர்பான சொல்லாடல்கள் நிலைப்பாடுகள் அதிகாரப்பீடங்களால் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. '13' நடைமுறைப்படுத்தப்படும், '13'க்கும் அப்பால் (13 பிளஸ்) செல்வதற்கும் நாங்கள் தயார் என்ற வாக்குறுதிகள் மாறிமாறி வழங்கப்படும். ஆனால், அவை வாய்ச்சொல்லுடன் நின்றுவிடுமேயன்றி, அதற்கு அடுத்ததான செயற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றதேயில்லை. குறைந்தபட்சம் இந்தச் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள்கூட முன்னெடுக்கப்பட்டதேயில்லை. ஆதலால், ரணிலின் கருத்துக்கள் மீதான நம்பகத்தன்மை என்பது தமிழர்களுக்கு இல்லவேயில்லை. இன்னும் சொல்லப்போனால், கடன்மறுசீரமைப்புத் தொடர்பான இந்தியாவின் இணக்கம் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் இலங்கைக்கான வருகை என்பவற்றுக்கான 'நன்றிக் கடன்தான்' ரணிலின் இந்த வார்த்தைகள் என்ற 'தார்மீகச் சந்தேகம்'தான் தமிழர் தாயகத்தில் தற்போது எஞ்சியிருக்கின்றது.

இலங்கை ஜனாதிபதி என்பவர் நாடாளுமன்றத்தால் கட்டுப்படுத்தக்கூடிய தலைவர் அல்லர். அவர் நிறைவேற்றதிகாரம் கொண்டவர். எனவே, 13ஆவது திருத்தம் தொடர்பில் இவ்வாறான துல்லியமான கருத்துக்களை வெளிப்படுத்தும் ரணில், அந்தத் திருத்தத்தை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். அரசமைப்பில் சுமார் 3 தசாப்தங்களாக உயிர்ப்புடன் இருக்கின்ற இந்தத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் ரணிலுக்கு அப்படி என்ன சட்டச்சிக்கல் இருந்துவிடப்போகின்றது? என்ற கேள்வி இங்கே எழுவது தவிர்க்க முடியாததாகின்றது. நாடாளுமன்றத்தில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் '13 பிளஸூக்குத் தயார்' என்று அறிவித்திருக்கின்றார் மஹிந்த. 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எந்த எதிர்ப்பும் வெளிப்படுத்தப் போவதில்லை என்று தெரிவித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித். இத்தனையையும் தாண்டி ஓர் இருண்மை நிலையிலிருந்து 13 ஊடாடுகின்றது என்றால் அந்த இருண்மைநிலையே இலங்கையின் எதிர்காலமாகவும் மாறிவிடலாம். இந்தப் புரிதலை தென்னிலங்கைத் தலைவர்கள் ஏற்படுத்திக்கொள்ளட்டும்.




# நிபந்தனைகளை நிறைவேற்ற அழுத்தம் கொடுக்கும் ஐ.எம்.எப்.



கொழும்பு, ஜன.28

சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்தின் நிதித்துறை சீர்திருத்தங்களை வரவேற்றுள்ளது. ஆயினும் முன் நடவடிக்கைகள் அனைத்தையும் நிறைவு செய்ய வேண்டியதன் அவசியத்தை சர்வதேச நாணயநிதியம் வலியுறுத்தியுள்ளது. அவை கடினமாக இருக்கும்.

இவ்வாறு நிதி ராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனுடன் நேற்றுமுன்தினம் நடத்திய சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நடவடிக்கைகள் கடினமானவையாக இருக்கும் என்கின்றபோதும், நிதியுதவியைப் பெற்றுக்கொள்ள அதுவே ஒரு வழியாகும். நிதித்துறையில் மேலும் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்காகப் புதிய சட்டங்கள் கொண்டுவரப்படும் என்பது அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை சீர்திருத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது - என்றார். (எ-இ)

# மனித உரிமைகளை மதிப்பது இலங்கை செழிக்க அவசியம்!

## அமெரிக்கா வலியுறுத்து

கொழும்பு, ஜன.28

மனித உரிமைகளுக்குக் கொடுக்கப்படும் மதிப்பு இலங்கையில் நிலைத்தன்மைக்கும், பொருளாதார செழிப்புக்கும் மிக அவசியமானது என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சர்வதேச குற்றம் நீதிக்கான தூதுவர் பெத்வான் சாக் தெரிவித்துள்ளார்.

கனடாவில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் நடத்திய சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நீதி, பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தை ஊக்குவிப்பது தொடர்பாகக் கனடாவைச் சேர்ந்த புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் ஆக்கபூர்வமான பேச்சுக்கள் நடத்தப்பட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

நாளை 29.01.2023 ஞாயிற்றுக்கிழமை தை 15

| | | |
|---|---|---|
| சுபநேரம் | : | 09.36 - 11.06 |
| ராகுகாலம் | : | 05.06 - 06.36 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தமிழ் ம.ம. வித்தி புலமைப்பரீட்சையில் 73 பேர் சித்தி

வவுனியா, ஜன.28
புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த புதன்கிழமை வெளியாகியிருந்த நிலையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் 73 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேலான பெறுபேற்றைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.
அதனடிப்படையில் 100 - 141 புள்ளிகளுக்கிடையே 96 மாணவர்களும், 70 - 99 புள்ளிகளுக்கிடையே 21 மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு கீழ் 4 மாணவர்களும் பெறுபெற்றை பெற்றுள்ளனர்.
குறித்த பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு இம்முறை 194 மாணவர்கள் தோற்றியிருந்தமையுடன் அவற்றில் 190 மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினை பெற்றுள்ளனர். சித்தி விகிதம் 98 விகிதமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.
(ய-110)



## பேசாலை மருத்துவமனைக்கு நோயாளர் காவு வண்டிகள்

மன்னார், ஜன. 28
மன்னார் மாவட்ட பேசாலை பிரதேச மருத்துவமனைக்கு அதி தீவிர சிகிச்சை வசதிகளைக் கொண்ட இரு நோயாளர் காவு வண்டிகள் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டன.
இலங்கை அரசின் மத்திய சுகாதார அமைச்சால் கொரோனா நிவாரண நிதியத்தின் மூலம் 80 நோயாளர்கள் காவு வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.
அவற்றுள் கொரோனாத் தொற்று தடுப்பு மற்றும் முறியடிப்பில் இலங்கையின் ஏனைய பகுதிகளை விட மன்னார் மாவட்டம் சிறந்து விளங்கியமையால் ஏனைய இடங்களை விட மன்னாருக்கு அதிதீவிர சிகிச்சை வசதிகளை உள்ளடக்கிய இரு நோயாளர் காவு வண்டிகள் வழங்கப்பட்டன என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி தர்மராஜன் வினோதன் தெரிவித்தார்.
(ஒ-14-60)

## எயார்லைன்ஸ் நிறுவனத்தில் நிர்வாகசபை முறைகேடுகள்!

### விமான நிறுவனத் தொழிற்சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

அரச நிறுவனங்களில் பதவியுயர்வு மற்றும் ஊதிய அதிகரிப்பு என்பன நிறுத்தப்பட்ட நிலையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிர்வாக சபையால் கடந்த ஆண்டு ஒன்பது அதிகாரிகளுக்கு பதவியுயர்வுடன் 3 கோடி ரூபாவுக்கு மேல் கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளது.
விமான நிறுவன தொழிற்சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் இதனை வெளிப்படுத்தியுள்ளது.
அதில் மேலும் உள்ளதாவது:-
அரசாங்கத்தையும் துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சையும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிர்வாக சபை தவறாக வழிநடத்துகிறது.
இதுதொடர்பில் விசாரணை நடத்தி தவறை சரிசெய்யுமாறு விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் கோரிக்கை விடுத்தபோதும் விசாரணை நடத்தப்படவில்லை.
எனவே, துரித விசாரணை நடத்தி நிர்வாக சபையின் நடவடிக்கை சரிசெய்யப்பட வேண்டும் என தொழிற்சங்கம் அதில் வலியுறுத்தியுள்ளது.
(ச-இ)

### வவுனியா - மன்னாரில்

# ஜனநாயகக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அறிமுகம்





வவுனியா, ஜன. 28
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாகத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் வவுனியாவில் கடந்த புதன்கிழமை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், கோவிந்தம் கருணாகரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா, வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், எம்.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் பலர் கலந்துகொண்டனர். நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாகவும் கருத்துக்கள் பகிரப்பட்டன.
அதேவேளை மன்னார் மாவட்டத்திலும் ஐந்து கட்சிகளை உள்ளடக்கி ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாகத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது 5 கட்சிகளை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் பங்கேற்றனர்.
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி உள்ளூராட்சிசபைத் தேர்தலில் குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(ச-110-56)

## உடைமையில் கஞ்சா; சந்தேகநபருக்கு மறியல்

சாவகச்சேரி, ஜன. 28
சாவகச்சேரி பகுதியில் 20 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கடந்த சனிக்கிழமை இந்தக் கைது இடம்பெற்றது.
(ச-9)

## சுமந்திரனால் தான் கூட்டமைப்பில் பிளவு

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு


யாழ்ப்பாணம், ஜன. 28
தமிழ்மக்களின் அடையாளத்துக்காக குரல்கொடுக்க விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பிளவடைந்துள்ளது. இதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கியர் எம்.ஏ. சுமந்திரன் என்பது பகிரங்கமான விடயமே. இவ்வாறு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாகத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மன்னார் நகரமண்டபத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி, மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியவற்றை இணைத்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக உள்ளூராட்சித் தேர்தலில் குத்துவிளக்குச் சின்னத்தில் களமிறங்குகின்றோம்.
மக்களின் பிரதிநிதிகளாக குரல்கொடுப்பதற்காக தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்டதே கூட்டமைப்பு. ஆனால் வாக்குகளை பெறும் அவாவில் தமிழரசுக் கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறியுள்ளது. இந்தப் பிளவுக்கு எம்.ஏ. சுமந்திரனே சந்தர்ப்பங்களை உருவாக்கியவர் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே. பிளவால் ஒருபோதும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியாது - என்றார்.
(ச)

## சமய அறிவுப் போட்டிகள்

பளை. ஜன. 28
சிவராத்திரியை முன்னிட்டு பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் நிர்வாகத்தினரால் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சமய அறிவுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கோயில் வளாகத்தில் இடம்பெறுமென நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.
(ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 • 06 • 1952

மறைவு 12 • 02 • 2019

அமரர் **தம்பித்துரை பாலகிருஷ்ணன்**

(இளைப்பாறிய ஆசிரியர், வணிகக்கல்வி – சாவகச்சேரி, இந்துக்கல்லூரி – சமாதான நீதவான்)

திதி : ரத சப்தமி (28.01.2023)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்

மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
நான்காண்டுகள் சென்றாலும்
கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

**உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

(CS 48810) (3/6)

குடும்பத்தினர்

# வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## பதவி வெற்றிடம் - வெளிவாரி நியமனம்

வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தகமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி/சம்பள அளவுத்திட்டம் :**

i. எழுதுனர் 302/12
18820-170x10-185x10-22370
வெற்றிடம் - 01

ii. கணினிப்பக்க உருவாக்குனர் 322/13
18360-160x10-170x10-21660
வெற்றிடம் - 01
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைவாக ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

**02. தகமைகள் ( சுற்றுநிருபம் - 01/2021)**

**எழுதுனர் 302/12**

i. கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத் திட்ட எழுதுனர் / கணக்காய்வு எழுதுனர் / காசாளர் / கணினிப் பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்ட கணக்குப்பதிவாளர் எழுதுனர் / காசாளர் / கணினிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ii. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் / பயிற்சி நிறுவனமொன்றில் கணக்கியல்/ கணக்குப் பதிவியல் தொடர்பான பயிற்சி நெறிக்கான சான்றிதழ்.

அல்லது

iii. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி

iv. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

**கணினிப் பக்க உருவாக்குனர் - 322/13**

I. கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்ட கணினிப்பக்க உருவாக்குனர் பதவியில் 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்ட கணினிப்பக்க உருவாக்குனர் பதவியில் 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

II. க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தியுடன் அரச / அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழுநேர MS OFFICE / அதனையொத்த கணினிப் பாடநெறிக்கான சான்றிதழ்.

அல்லது

III. அரச / அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழுநேர கணினிப் பாடநெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**03. வயதெல்லை** : 18 – 45 ற்கு உட்பட்டிருத்தல்

**04. விண்ணப்ப முடிவு திகதி** : 14-02-2023

**05. குறிப்பு**

* கூட்டுறவுச் சங்கங்களின் நிரந்தரப்பணியாளர்களாயின் உரிய சங்கத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். கூட்டுறவுச்சங்கப் பணியாளர்களாயின் வயதெல்லை ஏற்புடையதல்ல.
* ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம் ஒவ்வொரு பதவிகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
* விண்ணப்பிக்கும் பதவி, முழுப்பெயர், நிரந்தரமுகவரி, தற்போதைய வசிப்பிட முகவரி, அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, வயது, பால், கல்வித்தகமை, தொழிற் கல்வித்தகமை , சேவைத்தகமை ஆகிய சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்படிவத்தினை தாங்களே தயாரித்து, கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு தலைவர், வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இல.44, குட்செட் வீதி, வவுனியா" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**திகதி : 25-01-2023**
TP – 024-2222341 , 024-2222636

சு. புவனேந்திரராசா (JP) தலைவர்,
வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
இல.44, குட்செட் வீதி,வவுனியா.

# 31ஆம் நாள் நினைவும் கண்ணீர் அஞ்சலியும்


யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் மற்றும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட

## திரு. இமானுவேல் செபதாஸ் இராஜ்குமார் பெனடிக்ற்

தோற்றம்
03.10.1958



மறைவு
29.02.2022



**அன்பின் திருவுருவே, பாசத்தின் இருப்பிடமே, எமது குடும்ப குலவிளக்காக நிலைத்துவிட்ட குமார் அண்ணா இதய வலியுடனும் விழிகள் சொரியும் கண்ணீருடனும் தங்கள் 31வது நாள் நினைவஞ்சலியுடன் தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

தண்ணீர்த்தாழ்வு,
கட்டுவன்,
தெல்லிப்பளை.

என்றும் நீங்காத நினைவுகளுடன்
**ஜெயபாலன் - சிவபூபதி (லதா)**

(CS/23115)4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYB

## வீடு வாடகைக்கு

மல்லாகம் கோவில் வீதியில் வருமானத்துடன் கூடிய மூன்று அறைகள் உள்ள வீடு உள்ளது.

தொடர்புகளுக்கு: T.P: 077 868 8913

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி பகுதியில் அறிவியல் நகரில் பல்கலைக்கழகத்திற்கு அருகில் உண்டு. வீடு முழுமையாக வாடகைக்கு வழங்கப்படும்.

T.P: 076 049 6508

## வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள Fresh Juice நிலையத்திற்கு Fresh Juice செய்யக்கூடிய பெண் தேவை.

T.P: 076 049 6508

## The Royal College of Jaffna

பிரான்பற்று வீதி, சங்கானை

Tel:- 077 675 1649

சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில,

ஆசிரியர்

ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி . Diploma in English and Science (M.L.S)London

(CS 48812) (2/6)

## கார் விற்பனைக்கு

Nissan March (K-12) 2011

Registration (KN-xxxx)

தொடர்பு : 077 240 2093

Price : 3.2 M


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (29.12.2022) வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

### அமரர் வேலுப்பிள்ளை விஜயகுமார் (விசயன்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.01.2023) சனிக்கிழமை அவரது இல்லத்திலும் (சுன்டர்), 29.01.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் (நாவலர் வீதி, மாதகல்) நடைபெறவிருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலர் வீதி,
மாதகல்.

குடும்பத்தினர்

(cs.48780(2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 03 . 1932



மறைவு 27 . 01 . 2023

### திருமதி குமாரசிங்கம் தங்கம்மா

இணுவில் கிழக்கு குமாரலிங்கம் வீதி மஞ்சத்தடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசிங்கம் தங்கம்மா நேற்று (27.01.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், பொன்னம்பலம் - ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும், விஜயகலாநிதி (சுவீடன்), சுரேஸ்குமார் (இணுவில்), விஜயரஞ்சினி (பிரான்ஸ்), பாலகுமார் (ஆசிரியர், வயாவிளான் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயும், சிவபாலன் (சுவீடன்), நவரஞ்சினி (இணுவில்), சாந்தகுமார் (பிரான்ஸ்), சுபாசினி (நடேஸ்வராக் கல்லூரி-ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, பூரணம் மற்றும் சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாரத், விஜித், கோபி (சுவீடன்), வினோஜி (I.T. கொழும்பு), கஜீபா, செல்வராஜ் (பிரான்ஸ்), வர்ஜன் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), திவ்ஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 670 3398

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில்
2022 தரம்-05 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி



கந்தலிங்கம் கிஷாந்
(புள்ளி-167)



சிவரதன் அபிநயன்
(புள்ளி-154)

Congratulations

அவர்களையும் அதற்கு வழிகாட்டியாக இருந்த அதிபர் அவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

வாழ்த்துவோர்: முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை

## நீங்காத நினைவுகளுடன்...



(CS 23124) (3/6)

கடந்த 29.12.2022 அன்று இறைபதம் அடைந்த எமது பாடசாலையின் உப அதிபர்

### அமரர் புஸ்பரத்தினம் தயாபரன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆனைக்கோட்டை மூத்த நயினார் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்


## அறை வாடகைக்கு

பிரபல பாடசாலைகளுக்கு அருகாமையில் பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குளியில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. அரச அல்லது வங்கி பெண் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம். தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம்

(CS 48806) (3/6)

071 413 0233


## மரண அறிவித்தல்

தோற்றம் 28 • 02 • 1940



மறைவு 26 • 01 • 2023

### திருமதி குணரத்தினம் ரஞ்சிதமலர்

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி கு. ரஞ்சிதமலர் அவர்கள் 26.01.2023 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, பவளம் தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற சீனிவாசகம், குணரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் மனோரஞ்சன், ரஜினி, மனோராஜ், காலஞ்சென்ற குணராஜ், மாலினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவானந்தன், ராஜீ, தயாபரி , ராகவன் ஆகியோரின் மாமியாரும் சுஜன், மயூரன், தீபக், துர்க்கா, கார்த்திக், சச்சின், துஷாரா, மிலனா ஆகியோரின் அன்புப் பேத்தியும் காலஞ்சென்ற ரட்ணமலர், ராணிமலர் மற்றும் பாலசுப்பிரமணியம், இந்திரமலர் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 28.01.2023 சனிக்கிழமை மதியம் 1.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 29.01.2023 நாளை ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகளின் பின்னர் பி.ப 3.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்
குடும்பத்தினர்
0112-559156, 077-9234672

## மனைவியுடன் தகராறு; மகனுக்கு விஷம்
### தந்தை கைது

கொழும்பு, ஜன. 28

மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக 12 வயதான மகனுக்கு விஷம் கொடுத்த தந்தையொருவர் கடந்த புதன்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பொலநறுவையிலுள்ள கிராமமொன்றில் இடம்பெற்றுள்ளது. தந்தைக்கும் தாயுக்கும் இடையே நீண்டகாலமாக நிலவிவந்த குடும்பத் தகராறு காரணமாக பிரிந்து வாழும் மனைவியை வீட்டுக்கு அழைப்பதற்காக மகனுக்கு விஷம் கொடுத்தேன் என தந்தை வாக்கு மூலம் அளித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். மகன் சிகிச்சைக்காக பொலநறுவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் தந்தை சட்டநடவடிக்கைக்குட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.2 கோடி பெறுமதியான நகை அரச வங்கியொன்றில் திருட்டு

கொழும்பு, ஜன. 28

மட்டக்களப்பு ஓட்டமாவடியிலுள்ள அரச வங்கியொன்றிலிருந்து 2 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். தங்கப் பாதுகாப்புக் கடனைப் பெறுவதற்காக அடமானம் வைக்கப்பட்ட தங்க கையிருப்பை சேமிக்க வாடிக்கையாளர் ஒருவர் வங்கிக்குச் சென்றபோது, தங்கம் அடங்கிய பெட்டகத்தில் நகைகள் காணாமற் போயுள்ளமை தெரியவந்துள்ளது. அதனையடுத்து வங்கியின் தலைமைக்காரியாலயத்தால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் வரை தங்கப் பாதுகாப்புக் கடன் பெறுவதற்காக வாடிக்கையாளர்கள் வங்கியில் அடகு வைத்த தங்க நகைகளே இவ்வாறு காணாமற் போயுள்ளன என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டு இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-14-இ)

## சிவபூஜா மாநாடு

யாழ். ஜன. 28

யாழ்ப்பாணம் இந்து சமயப்பேரவையின் ஏற்பாட்டில் சிவபூஜா மாநாடு பேரவையின் நடராஜர் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணி முதல் முற்பகல் 11 மணிவரை இடம்பெறவுள்ளது.

மாநாட்டின் வரவேற்புரையை கலாபூஷனம் கு.சரவணபவாநந்தன் நிகழ்த்தவுள்ளார். தலைமை உரையை இந்து சமயப் பேரவையின் தலைவர் சிவசிறி ஈசான சிவசக்திகிரீவன் ஆற்றவுள்ளார். ஆசியுரையை நல்லை ஆதீனக் குருமுதல்வர் சிறீலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் நிகழ்த்தவுள்ளார். கருத்துரைகளை சிவசிறி க.சோமாஸ்கந்தக் குருக்கள், பிரம்மசிறி ப.சிவானந்த சர்மா, க.கயிலைவாசன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து விருது வழங்கலும் இடம்பெறவுள்ளது. (ம)


**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி -90 ரூபாய் பூச்சுவேலை, கட்டுவேலைகளும் செய்துதரப்படும்.

077 334 1281



**Spoken English Classes**

- பாடசாலை மாணவர்கள்
- தொழில் தேடுவோர்
- வெளிநாடு செல்லவிரும்புபவர்கள்

அனைவருக்குமானது அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: 077 311 6202, 077 921 7997 (cs.18314) (2.6)


## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் சுபகிருது வருஷம் தைமாதம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (20.01.2023) அபரபட்ஷ சதுர்த்தசி திதியில் சிவபதமடைந்த எமது தாயார்

**இரத்தினசாமிக்குருக்கள் பார்வதி அம்மா**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்

- 29.01.2023 - ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி தசாகம்
- 30.01.2023 - திங்கட்கிழமை ஏகோதிஷ்டம் மாசியம்
- 31.01.2023 - செவ்வாய்க்கிழமை சபிண்டீகரணம்
- 01.02.2023 - புதன்கிழமை கிருஹயக்ஞம்

மேற்படி தினங்களில் நடைபெறும் கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மல்லாகம்,
பழம்பிள்ளையார் கோவில் மேற்கு வீதி,
மல்லாகம்.

குடும்பத்தினர்

(cs 23107) (2.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 03 . 1949



இறப்பு 25 . 01 . 2023

### திருமதி தேவிசத்தியபாமா தேவராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

K.K.S.. வீதி, கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவிசத்தியபாமா தேவராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியை) கடந்த (25.01.2023) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தேவராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) என்பவரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை சிவஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், பானு (லண்டன்), நிரோஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவரான கனகலிங்கம் (கனடா) மற்றும் மகாலிங்கம் (கனடா), சற்குணமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், செல்வகுமாரின் அன்பு மாமியாரும், சாத்விகா, சாத்விகன் (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ரஞ்சி, மகாதேவி கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம்மா, நேசமலர், பாலசுப்பிரமணியம், செல்வநாயகி மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 39153) 1/5

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அன்னைமடியில் 20.06.1957

ஆண்டவன்அடியில் 20.01.2021

அமரர்

### தம்பிஐயா மோகனதாஸ் (அப்பு)

திதி: ஸப்தமி

அன்புத் தெய்வமே!
அருமை அப்பாவே!
அன்பான உடன் பிறப்பே!
அகிலம் விட்டு அம்மன் பாதம் சென்று
ஆண்டு இரண்டு வந்ததுவே!
அகிலத்தில் நாம் வாழும் வரை
நின் ஆசி எமக்கு வேண்டும் ஐயா!

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

புங்குடுதீவு - 3,
கொழும்பு - 13.

நின் நினைவால் வாழும்
குடும்பத்தினர்

(cs 38814) (2.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி பாடசாலை மாணவனும்,
திரு.திருமதி இலக்ஷ்மன் அனற்மேரி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனுமாகிய

### செல்வன் இ. அஜிஸ்ரன்

2022 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு இவருடன் சித்தியடைந்த மாணவர்களையும் பாராட்டுவதுடன் மேலும் பல சித்திகளைப் பெறவேண்டுமென இறைவனை வேண்டி இவரை வழிப்படுத்திய பாடசாலை அதிபர் அருட்சகோதரி அருள்மரியா, வகுப்பாசிரியர் திருமதி விஜயவரதன் சாந்தினி, யா/அச்சுவேலி ஆரம்ப பாடசாலை ஆசிரியரும் கஸ்மி தனியார் கல்வி நிலைய ஆசிரியருமான திரு. சண்முகராசா சந்திரகாசன் அவர்களையும் ஆரம்பக் கல்வியை கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்து நிற்கும்.

நிரந்தர முகவரி:
தோலகட்டி,

தற்காலிக முகவரி:
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

ஜோன் அமிர்தநாயகி
குடும்பத்தினர்
077 716 2050

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு

2022ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிடப்பட்டன. கிடைக்கப்பெற்ற பாடசாலைகள் சிலவற்றின் பரீட்சை முடிவுகள் வருமாறு…

## யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

அ.புவன்- 157, ர.டர்னிஷ் - 156, வினுசியா - 155, பு.யர்விகன் -151, ற.சேனுயா -151, பி.ஷமீர்கான்- 150, நா.ரிஷிபிரசாத் -149, சி.அபினாஷ்-148, ரா.நிதீஷன் -146 (ய-63)

## யாழ். அளவெட்டி அருணோதயக் கல்லூரி

சுதாகரன் கிஷானன் -178, மயூரதன் டிரோஷன்- 176, ராஜபாலன் இவோன் ஸ்ரானிஸ் -172, மோகனதாஸ் கீர்த்தியன் -171, ஜெயசந்திரன் ஹரிஸ் -169, மகேந்திரன் சாருஜன்- 164, யுக்தியா பத்மதீபன் -164, ரவிந்திரன் கோகுலன் -163, காண்டீபன் நிருக்ஷன் -162, வி.கம்சனன் -161, செந்தூரன் அனோஸ்-158, ஸ்ரீஜனனி ஸ்ரீதரன் -158, கஷ்மினா நிமலதாஸ் -155, துர்விகா திருக்குமார் -155, விஜயகுமார் துஷானன் -153, மேனுகா பரமகீதன்- 153, தக்ஷயா கஜானன் -153, சுவர்னிகா ஜெகசூரியர் -152, சுரேந்தன் தனுசன்- 151, லக்ஷனா சிவகாந்தன்- 150, சஸ்மிதா உதயராசா- 150, சுருதிகா ராஜ்மோகன் -150, அவர்னா ரமணேஸ்வரன் -148, சு.புகழ்நேசன்- 147, பகீஸ்வரன் லக்ஷயன்- 146, டினுஷியா அருளானந்தன் - 145, சதீஸ்வரன் நிதுஷன் - 143 (ய-63)

## உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

கே.ரதுசன் -172, டி.கேசவன் -156, எம்.அக்சரா - 143 (ய-159)

## மந்துவில் சிறீபாரதி வித்தியாலயம்

சு.கிஷாந்- 167, சி.அபிநயன் -154 (ய-159)

## பேராலை சி.சி.த.க. பாடசாலை

காசிநாதன் சுகீதன் 143 (ய-159)

## கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயம்

சி.கபிஸ்ரா -150, ச.அப்சயன் -148, ரா.நிருஜனன் -147 (ய-159)

## கிளி/கட்டைக்காடு அ .த .க பாடசாலை

ச.பத்மகவி- 176, பு.றதுநிஷா -162, ப.டதுர்சன் -157, சி.அபிநயா- 156, செ.லிபினா -147, சு.தேனுயா -142, ஷ.கிருதிஸ் -140, ர.நிதுஷிகா -137, ச.கவிசாளினி -133, ந.அனுசாந் -128, பி.குயின்சன் -128, ஜெ.ஜெனசிகா -106, அ.சஜிந்தன் -103, ஜெ.நிதுசன் -101 (ய-113)

## தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

ஜெ.கெவின் லீதன் -172, தி.திஷாந் - 170, செ.பிரவீன் - 166, தி.லஸ்மிதா - 164, தி.டினாஷ் - 163, ச.ஹஸ்னா - 162, கி.அபிவர்ஷா - 162, அ.வைஸ்ணவி - 160, பா.சமினா - 159, சு.கேதாரணி - 158, பி.டிலானி - 157, கி.கௌசிக் - 156, சு.ஜான்சன் - 154, ஜெ.கயல்விழி - 154, கு.திபிநயன் - 154, ம.பிரவீன் - 154, கு.லேகா - 154, ல.சிம்மஜன் - 154, ச.பபிஷா - 153, ஜெ.பார்த்திபன் - 153, பா.தனுபகன் - 153, கி.ஸபரீஷா - 153, சு.பிரவீன் - 153, த.கரிஷ்மன் - 152, கோ.யர்ஷினா - 152, ஜ.தக்ஷியா - 151, சி.மிருஷ் - 149, க.சிறீகரன் -148, சி.குகதர்சன் -146, உ.சாத்துவீகன் -146, ச.கினோசிகா -145, ந.சர்மியா -145, ந.ஷயானுகா -145, ரு.தர்சன் -144, சி.லுவேதிகா -143, த.அபிஷாலினி -143

## மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்

அ.அக்சயா -155, ச.கம்ஷிகன் -142, உ.கவிகா -106, கா.கானகி- 134, பி.அஸ்னிகா -144, அ.மேனுயா -155, கு.நிதர்சன் -88, சா.அப்சரா -114, ச.ஹிசோக் -108, ற.நிதீசன் -118, ரா.தருண்யா -141, பா.திசானிக்கா -134, பி.சதுர்சிகன் -115, பி.கோபின் -112, பி.கரிசா -111, பி.ஆதித்திகன் -73, ம.தணிகன் -100, லோ.சஞ்சயன் -92, ம.பபின் -143, பி.அஸ்வீன் -121, ம.ரேசிகா -152, ம.திருஷன் -165, ம.தேனுஜி -140, நி.கெவின்பென் டெனிஷன் -86, நி.யதுஸ்னா -136, ப.அஸ்னவி -134, பி.யனுசன் -164, சு.ஆர்த்திகா -158, சி.பிரதீக் -118, சி.ஸவினாஸ் -125, சி.பிரணவீ -119, சோ.சங்கீர்த்தன் -141, சி.அதிஸ்னா -139, சி.கனிஷ்கா -171, செ.அபினா -95, க.ஹன்சிகா -143, சு.ஷதுஸ்ணன் -135, சி.வைஷ்ணவி -87, சி.ஆதர்சன் -170, சி.நிவாஜினி -111, சி.கிருசிகா -112, ச.யதுர்சன் -93, செ.தனோஜ் -122, ச.கிஷாந் -114, ச.ஜஸ்மிதா -93, ச.தருண் -179, சு.கவிலயன் -147, து.பிரஷாயினி -69, செ.திஷானந் -143, த.ஜதுஸ்மிகா -126, ச.பிரியங்கன் -116, வி.டிசாளன் -120, வ.ஜர்மிஷன் -136 (ய-159)

### புலமைப்பரிசில் பரீட்சையில்

# முகமாலை றோ.க.த.க. பாடசாலை மாணவன் முதல் தடவையாக சித்தி



கிளிநொச்சி, ஜன.28
கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி வடக்கு வலயத்துக்குட்பட்ட முகமாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வரலாற்றில் முதல் தடவையாக புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவன் ஒருவர் சித்தியடைந்துள்ளான்.
குறித்த பாடசாலையைச் சேர்ந்த கௌரீஸ்வரன் கபிஷயன் என்ற மாணவனே புலமைப்பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். (ய-113)

# நேற்று மட்டும் யாழில் 3 தேர்தல் வன்முறைகள்

யாழ்ப்பாணம், ஜன. 28
யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் இதுவரை 3 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ் தெரிவித்தார்.
தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல்கள் நிறைவுபெற்றுள்ளன.
தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு தற்போது தேர்தல் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.
இந்தநிலையில் யாழ்.மாவட்டத்தில் நேற்று மாத்திரம் 3 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ச- 27)

### உள்ளூராட்சித் தேர்தல்

# 402 உறுப்பினர் பதவிக்காக யாழில் 4,111 பேர் களத்தில்!




யாழ்ப்பாணம், ஜன. 28
யாழ்ப்பாண மாவட்ட 17 உள்ளூராட்சி மன்றங்களின் 402 உறுப்பினர்கள் தெரிவுக்காக 4 ஆயிரத்து 111 பேர் போட்டியிடுகின்றனர் என யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.அமல்ராஜ் தெரிவித்தார்.
யாழ்ப்பாண தேர்தல் அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
உள்ளூராட்சிசபை தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள், சுயேட்சைக் கட்சிகள் தங்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டுள்ளன.
அதற்கமைய தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 13 அரசியல் கட்சிகளும் 15 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.
13 அரசியல் கட்சிகள் சார்பில் 135 வேட்புமனுக்களும் 15 சுயேட்சைக் குழுக்கள் சார்பில் 15 வேட்புமனுக்களுமாக 150 வேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
அதேவேளை யாழ். மாவட்டத்தில் 4 லட்சத்து 86 ஆயிரத்து 423 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.
அவர்கள் வாக்களிப்பதற்காக 514 வாக்களிப்பு நிலையங்கள் யாழ். மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
இம்முறை உள்ளூராட்சிமன்ற சட்டத்துக்கிணங்க அந்தந்த வட்டாரங்களிலே வாக்குகள் எண்ணப்பட்டு வட்டாரங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்படும்.
பின்னர் மாவட்ட ரீதியாக முடிவுகள் அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
அந்தவகையிலே 243 வாக்கு எண்ணும் நிலையங்கள் யாழ். மாவட்டம் முழுவதுமாக அமைக்கப்படவுள்ளன.
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சிசபைகளுக்குமாக வட்டார அடிப்படையில் 243 உறுப்பினர்களும் கட்சிகள் பெற்றுக் கொள்கின்ற வாக்குகளின் அடிப்படையில் தெரிந்து அனுப்பப்பட வேண்டிய 159 வேட்பாளர்களுமாக 402 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.
இந்த 402 உறுப்பினர்கள் தெரிவுக்காக 4ஆயிரத்து 111 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.
இதன் அடிப்படையில் மொத்த வாக்காளர் தொகையிலேயே 0.85 வீதமான வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட உள்ளனர் என யாழ். உதவித் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டார். (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் படை அதிகாரிக்கு இராணுவமரியாதையுடன் யாழில் இறுதிச் சடங்கு

யாழ்ப்பாணம், ஜன. 28



யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த முன்னாள் தமிழ் இராணுவ அதிகாரிக்கு 21 துப்பாக்கி வேட்டுக்கள் முழங்க மரியாதையுடன் இறுதிச் சடங்கு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. கீரிமலைப் பகுதியைச் சேர்ந்த முன்னாள் இராணுவ அதிகாரியான சுந்தரம் அருளம்பலம், கடந்த 23ஆம் திகதி திங்கட்கிழமை உயிரிழந்தார்.

அவர் கடந்த 1958ஆம் ஆண்டு இராணுவத்தில் கடமையில் இணைந்து, 1980ஆம் ஆண்டு ஓய்வு பெற்றிருந்தார். இந்த நிலையிலே மூப்பு காரணமாக அவர் உயிரிழந்தார்.

இறுதிச் சடங்குகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, யாழ். இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் போத்தொட்டதலைமையில் இராணுவ அதிகாரிகளின் 21 துப்பாக்கி வேட்டுக்கள்முழங்க இராணுவமரியாதையுடன் கீரிமலை இந்து மயானத்தில் அவரது உடல் தீயில் சங்கமமானது.

(ஒ-14-27)

ணங்களையும் மீட்பதற்கான சட்டநடவடிக்கையில் ஈடுபடுவதற்காக யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இவர்களுக்கான சட்ட உதவிகளை யாழ் . இந்தியத் துணைத் தூதரகத்தினர் மேற்கொண்டுள்ளனர். அத்துடன் நேற்றையதினம் தூதரக அதிகாரிகளுடன் அவர்கள் சந்திப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்தியப் படகுகளின் உரிமையாளர்கள் வடக்கு மீனவர்களைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர். இன்று குறித்த சந்திப்பு இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, அத்துமீறி நுழைந்த இழுவைப் படகுகளை எந்தக் காரணம் கொண்டும் விடுவிக்கக் கூடாது என்பதில் வடக்கு மீனவர்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-7)

டும்' எனவும் உத்தரவிட்டார். (அ-ம-3)

### நாயைக்...

கிணற்றுக்குள் கயிறு வழியாக இறங்கியுள்ளார். இறங்கிய போது கயிறு அறுந்ததையடுத்து அவர் கிணற்றுக்குள் வீழ்ந்து தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார். இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்த இளைஞர் ஊடகவியலாளரும் படைப்பாளியுமான விவேக்கின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-113)

### மூன்று...

தடவைகள் வருகை தராதவர்களின் மூன்று படகுகள் அரசுடமையாக்கப்பட்டன. மேலும் நான்கு படகுகளுக்கான வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது உரிமையாளர்கள் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். வழக்கின் சாட்சியாளர்களிடம் சாட்சியம் பெறப்பட்டது. இதையடுத்து அந்த நான்கு படகுகளுக்கான கட்டளை மார்ச் மாதம் முதலாம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (அ-ம-26)

### '13'...

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

'அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபட்டே தீரும். அது தமிழீழம் மலர வழிவகுக்கும். நாடெங்கும் மீண்டும் இரத்த ஆறு ஓடும். இப்படியான நிலைமை ஏற்படக்கூடும் என்று ஜனாதிபதிக்கும் தெரியும். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இதைப் பல தடவைகள் நாம் தெரிவித்துவிட்டோம். தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற மமதையுடன் ஒவ்வொரு நாளும் வாய்க்கு வந்த மாதிரி கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார் ரணில் விக்கிரமசிங்க.

சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் ஏமாற்றும் நோக்குடனேயே ஜனாதிபதி செயற்படுகின்றார். ஆனால், சிங்கள மக்கள் எப்போதும் விழிப்பாகவே இருக்கின்றார்கள். ஜனாதிபதி நடைமுறைக்குச் சாத்தியமில்லாத இப்படியான கருத்துக்களை வெளியிட்டுத் தனது பதவிக் காலத்தை இழுத்தடிப்பார் என்று தெரிந்துதான் அவரின் சர்வகட்சிக் கூட்டத்தை நாம் புறக்கணித்தோம்' - என்றார்.

'13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதால் நாடு பிளவுபடாது. எனவே, இந்தத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாமல் இருக்க வேண்டுமானால் யாராவது நாடாளுமன்றத்தில் 22 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து 13 ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்யவேண்டும்' என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இதையடுத்தே விமல் வீரவன்ஸ மேற்படி தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-22)

### இளவாலையில்...

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான் பகுதியில், நேற்றுமுன்தினம் மாலை சுண்டல் விற்பனை செய்துவிட்டு இளைஞர்கள் இருவர் திரும்பிக் கொண்டிருந்தனர் அப்போது மதுபோதையில் வந்த நபரொருவர் மேற்படி இளைஞர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். இந்த வாக்குவாதம் பின்னர் கைகலப்பாக மாறியதையடுத்து. மதுபோதையில் வந்தவர் மீது கம்பியால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலில் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளார். இதையடுத்து அவரின் உடல்நிலை மோசமடைந்துள்ளது. இதன்பின் அவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே சிகிச்சை பயனளிக்காமல் அவர் உயிரிழந்தார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

### ரணிலுக்கு...

களின் பின் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். இதனையடுத்து நீதிமன்றத்தால் அவருக்குப் பிணை வழங்கப்பட்டு குறித்த வழக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வவுனியாவைச் சேர்ந்த வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க வவுனியா மாவட்டச் செயலாளர் சிவானந்தம் ஜெனிட்டா மற்றும் வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் மனோகரன் சோமபாலன் ஆகிய இருவரையும் எதிர்வரும் 31ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்காக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

### படகுகளை...

இலங்கைக் கடற்படையால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. படகுகள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்கள் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் படகுகளின் உரிமையாளர்கள் 10 பேர் தமது படகையும் இதர மீன்பிடி உபகர

### தமிழர்கள்...

நீதிபதி பட்டபெண்டிகே இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் தங்கராசா கார்த்திகேசு என்பவர் கடந்த 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் திகதி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கைதுசெய்யப்பட்டார். அவரை எல்கந்த கதிரான பாலத்தில் வைத்துக் கைது செய்தோம் என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதையடுத்து சந்தேகநபர் தொலைத்தொடர்பு கோபுரங்களின் அலைவரிசையை அடிப்படையாக வைத்து, தான் கைதுசெய்யப்பட்ட இடத்தைக் கண்டறியுமாறு நீதிபதியிடம் கோரிக்கை விடுத்தார். அவரின் கோரிக்கையை ஏற்ற நீதிபதி தொழில்நுட்ப வல்லுநரின் உதவியுடன் அவர் கைதுசெய்யப்பட்ட இடத்தை இனங்காணுமாறு உத்தரவிட்டார். இதையடுத்து அவர் கைதுசெய்யப்பட்ட இடம் ஆமர் வீதி, சோனகத்தெரு என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் கைதுசெய்யப்பட்ட நேரமும் மாறுபட்டதாகக் காணப்பட்டது.

இதையடுத்து குறித்த வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது 'போதைப் பொருளை வைத்திருந்தமைக்காக ஏன் ஒருவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட வேண்டும்?' என்று நீதிபதி கேள்வி எழுப்பினார். இதற்கு 'இந்தியாவிலிருந்து தமிழர்கள் குறித்த நபருக்கு போதைப்பொருளை வழங்குகின்றனர்' என்று பொலிஸ் அதிகாரி பதிலளித்தார்.

இதனையடுத்து நீதிபதி, 'பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்வதற்கான சட்டங்கள் தொடர்பில் நீர் தெரிந்து வைத்துள்ளீரா?' என வினவியபோது பொலிஸ் அதிகாரி மௌனம் காத்தார்.

இதையடுத்து நீதிபதி, 'போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் ஒருவரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்க முடியாது. அதேபோல் தமிழர் என்ற காரணத்துக்காகவும் ஒருவரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்க முடியாது. இது அடிப்படை மனித உரிமைமீறல். அத்துடன் குற்றவியல் சட்டத்தை தவறாக பிரயோகிக்கும் செயற்பாடு. இதனை உடனடியாக நீதிமன்றப் பதிவாளர் ஊடாகக் கொண்டு செல்லவேண்

### பால்...

குழந்தை அச்சுவேலி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போது குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இதையடுத்து குழந்தையின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

குழந்தையின் 31 ஆவது நாள் கொண்டாட்டம் இன்று இடம்பெறவிருந்த நிலையில், குழந்தை உயிரிழந்தமையானது அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அச்சுவேலிப் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

### நாடாளுமன்று...

லாளர் சமன் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 8ஆம் திகதி காலை 10 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பித்து வைக்கப்படும். இந்தக் கூட்டத்தொடர் முடிவடைந்து புதிய கூட்டத்தொடர் ஆரம்பமாகும் சந்தர்ப்பத்தில் சம்பிரதாயப்படி ஜனாதிபதியால் அக்கிராசன உரை நிகழ்த்தப்படும். அந்தவகையில் நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் அக்கிராசன உரையில் 75ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டத்துடன் இணைந்ததாக நாட்டில் அமுல்படுத்தத் தீர்மானித்திருக்கும் புதிய கொள்கைகள், புதிய சட்டங்கள், 2023 - 2048 வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர தினத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு ஏற்றவாறு நாட்டின் முன்னேற்றத்துக்காக எவ்வித பேதமுமின்றி கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டிய வேலைத்திட்டம் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (அ-ம-22)

### ஹெரோய்னுடன்...

அவர் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண ரீதியில் மரதன், சைக்கிள் ஓட்டம்

கிளிநொச்சி, ஜன. 28

வடக்கு மாகாண ரீதியில் முழங்காவில் பிரதேசத்தில் அமரர் சண்முகம் பாலசிங்கம் நினைவாக தடகள விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கிளிநொச்சி முழங்காவில் ம.வி.பழைய மாணவர் சங்கத்தால் இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி சைக்கிள் ஓட்டப்போட்டியும் மறுநாள் 2ஆம் திகதி மரதன் ஓட்டப் போட்டியும் இடம் பெறவுள்ளன.

இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைவரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ளலாம் எனவும் பங்குபற்ற விரும்புவோர் குறித்த தினங்களில் மருத்துவச் சான்றிதழ், அடையாள அட்டையுடன் வருகை தருமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

(ச)

அகரம் உயர் நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
மல்லாகம் தரம் - 06 கொக்குவில்
தமிழ் / ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்" நிர்வாகி

**விற்பனைப் பிரதிநிதி தேவை**
கோண்டாவிலில் இயங்கும் உள்ளூர் உற்பத்தி நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. மோட்டார் சைக்கிள் வைத்திருப்பது விரும்பத்தக்கது.
T.P: 077 301 6834

**Wagon "R" Premium கார் விற்பனைக்கு**
உற்பத்தி 2019. முதல்பாவனை 2019. Nov, 50800km இரண்டாவது உரிமையாளரிடம் உள்ள Wagon "R" கார் (Full Option) விற்பனைக்குண்டு. இலங்கைக்கு AMW ஆல் புதிதாக இறக்குமதி செய்யப்பட்டது. (CS 48805) (3/6)
077 630 6733, 076 399 3008

**English Classes**
Gr 1 to O/L
Grammar with Schoolbook
வீடு வந்து கற்பிக்கப்படும். (CS 23140) (3/6)
தொடர்பு : 077 331 4608

**வீட்டுப் பணிப்பெண் தேவை**
கிளிநொச்சியில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டுடன் தங்கி நின்று பணி புரிய பணிப்பெண் தேவை. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். (CS 23136)(3/6)
074 003 6759, 070 368 9600


**துரை திருமணசேவை மணமகள் தேவை**
1994 இல் பிறந்த மிருகசீரிடம் முதலாம் பாதம் உடைய 8 இல் செவ்வாய் உடைய 46 பாவக்கிரகம் கொண்ட Soft ware Engineer மணமகனுக்கு உயர்ந்த உத்தியோகத்திலுள்ள மணமகளை எதிர் பார்க்கின்றோம். எம்மிடம் சகல தரப்பினரது ஜாதகங்களும் உண்டு. பதிவுகள் இலவசம்
077 656 8282 ஐயனார் வீதி, சண்டிலிப்பாய்.

**பணியாளர் தேவை**
SV முருகேசு அங்கர் விற்பனை முகவர் நிறுவனத்திற்கு கணினி வேலை செய்யக்கூடிய பணியாளர்கள் தேவைப்படுவதால் எதிர்வரும் 30ஆம் மற்றும் 31 ஆம் திகதிகளில் நேரில் வரவும்.
இல.154, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
021 492 5838, 021 222 2991

## முதலாம் ஆண்டு திவச அழைப்பு

கடந்த 25.01.2022 அன்று இறைபதமடைந்த
எங்கள் குல இதய தெய்வம்

### அமரர் இராசா பூபாலச்சந்திரன் (பூபாலப்பா)




அவர்களின் முதலாம் ஆண்டு திவசம் நாளை (29.01.2023) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
076 582 7233
(தாஸ் - மகன்)
ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

(CS 22903) (3/6)

## மரண அறிவித்தல்



### தசாவதாரன் ஹரன்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தசாவதாரன் ஹரன் அவர்கள் நேற்று (27.01.2023) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தசாவதாரன் (மணி) மற்றும் நாகபூசணி (வேணி) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்தியலிங்கம் (ஆயுள் வேத வைத்தியர்) மற்றும் பொற்கொடி தம்பதியரின் பாசமிகு மருமகனும், பராடேவியின் அன்புக் கணவரும், ஹம்சினி, மகீபன் ஆகியோரின் பாசத்திற்குரிய தந்தையும், ஜீவன், ஜெகன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், கேதீஸ்வரி, சுதர்ஜினி, அன்னம்மா, சிவறஞ்சி, துரையரங்கன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 190 6059
077 606 8579
புதுவளவு, ஏழாலை மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23157) 1/6

## மரண அறிவித்தல்



### அருட்கலாநிதி எட்வின் சவுந்தரா

அருட்கலாநிதி எட்வின் சவுந்தரா யாழ் மறைமாவட்ட குருவும் புன்னை நீராவியடி பிரதேசத்திலுள்ள ஆங்கில வளாகத்தின் இயக்குனரும் நிறுவுனருமான மல்லாகம் குளமங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்கலாநிதி எட்வின் சவுந்தரா அடிகளாரவர்கள் 13.01.2023 அன்று அமெரிக்காவில் இறைபதம் அடைந்தர்.

அன்னாரின் இறுதி அடக்கம் அமெரிக்காவில் 26.01.2023 வியாழன் அன்று நடைபெற்றது. அவரின் பூர்வீக இடமான குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் இறுதி மரியாதை திருப்பலி 28.01.2023 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபறட்ணம் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நீண்ட பல ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இற்குப் பிற்பட்ட காலப் பகுதியில் வெளிநாட்டுக்குப் புலம்பெயர்ந்து அமெரிக்காவில் உள்ள மிக்சிகன் மறைமாவட்டத்தில் இணைந்து அங்கும் கற்பித்தல் பணியில் தன்னை இணைத்துக்கொண்டார்.

புலம்பெயர் தேசத்திலிருந்து நாடு திரும்பி வன்னிப் பிரதேசத்திலுள்ள வறிய மாணவர்களின் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும் நோக்கோடு தனது முயற்சியினால் பிரபந்தனாறு,புன்னைநீராவி பிரதேசத்தில் ஆங்கிலக்கல்விக்கூடம் ஒன்றை நிறுவி ஆங்கிலக் கல்வியை கற்பித்து வந்தார். இங்கு பல மாணவர்கள் கல்வி பயின்று நல்ல நிலையில் உள்ளனர்.

அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற, இறுதிமரியாதை திருப்பலியில் பங்கெடுத்து மன்றாட உங்களை அழைத்து நிற்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 930 4444 (CR 39148) 4/6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 அம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.